# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 22 திங்கட்கிழமை (05-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி: 158


# வவுனியா நகர் மீது மீண்டும் புலிகள் ஆட்லறித் தாக்குதல்!

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 5

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று புறப்படும் பயணிகள் கப்பலில் இன்று ஐநூறு பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவர் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று பயணம் செய்ய பெயர் பதிவு செய்தவர்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு பாரிய ஜெனரேட்டர்கள் காங்கேசனில் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்டத்தில் மின்சார விநியோகத்தை மேற்கொள்ளவென பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஐந்து பாரிய ஜெனரேட்டர்களில் 4 ஜெனரேட்டர்கள் ''லங்காமுடித'' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 250 கே.வி.வலுவுள்ள இந்த ஜெனரேட்டர்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று இறக்கப்பட்டன.

இக்கப்பலில் தனியாருக்கும், அரச நிறுவனங்களுக்கும் 7 வாகனங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

அதேவேளை —

யாழ். மாவட்ட வீதிகளைத் திருத்த 2 ஆயிரத்து 400 பரல் தார் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் குத்தரிசி உட்பட மற்றும் பொருள்களுடன் ''மாஹோ'' கப்பல் இன்று கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்படவிருப்பதாக நேற்று தகவல் கிடைத்தது. (உ-3)

## மன்னார்-காங்கேசன் கப்பல்சேவை: பாதுகாப்பு அமைச்சு பச்சைக்கொடி?

கொழும்பு, மே 5

மன்னாருக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை நடத்தும் திட்டத்துக்கு பாதுகாப்பு அமைச்சு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வன்னிப் பாதுகாப்பு இணைப்பதிகாரியும் இச்சேவைக்கு ஏற்கனவே அனுமதி வழங்கி, அது குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் இருந்து வவுனியாவுக்கு வந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக அங்கு தற்போது காத்திருக்கும் சுமார் 10 ஆயிரம் பேரை அங்கிருந்து மன்னார் ஊடாக சுலபமாக — விரைவாக — வடக்கே அனுப்ப முடியும் எனக் கருதப்படுவதாலேயே மன்னார் — காங்கேசன்துறை கப்பல் சேவையை நடத்த முடிவாகியிருக்கின்றது.

இந்தப் பயணிகள் இதுவரை வவுனியாவில் இருந்து 90 மைல் தூரத்தில் உள்ள திருகோணமலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கிருந்து காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டு வந்தனர். அவர்கள் சுமார் 13 மணித்தியாலங்கள் கடல்பயணம் செய்ய வேண்டியிருப்பதோடு பலவித அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதையடுத்து, வவுனியாவில் இருந்து 50 மைல் தூரத்தில் உள்ள மன்னாருக்கு அவர்களை அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்புவது பற்றி ஆராயப்பட்டது.

மன்னாரில் இருந்து காங்கேசன்துறையை கடல்வழியாக ஐந்தரை மணித்தியாலப் பயணத்தில் சென்றடைய முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3-150)

## முச்சந்தி முரளி



ஒளிமயமான எதிர்காலம் கப்பலில் வருகுது எண்டு சொல்லுங்கோ...!

## யாழ். பல்கலை. ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 5

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக யாழ். பல்கலைக்கழக போதனை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாரம் நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் காலம் குறிப்பிடாது ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. (உ-3)

### சுட்டுக் கொல்லப்பட்ட

## இளைஞரின் சடலம் செஞ்சிலுவை குழுவிடம்!

வவுனியா நகரப் பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட சோதிலிங்கம் லிங்கதயாளன் என்ற இளைஞரின் சடலம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்காக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளை அதிகாரிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

படையினரே இந்த இளைஞரைச் சுட்டுக் கொன்றனர். இவர் விடுதலைப் புலிகளின் 'பிஸ்டல்' குழுவைச் சேர்ந்தவர் என படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-21)

## தஹநாயக்கா நேற்றுக்காலமானார்

கொழும்பு, மே 5

முன்னாள் பிரதமர் டபிள்யூ. தஹநாயக்க நேற்றுக் காலியில் தனியார் ஆஸ்பத்திரியில் காலமானார் அவருக்கு 95 வயது.

அவரது பூதவுடல் காலி றிச்மண்ட் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் காலியில் அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெறும்.

கல்வியமைச்சராக இருந்தபோது பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக பணிஸ் வழங்கும் திட்டத்தை அவர் நடைமுறைப்படுத்தியதால் 'பணிஸ் மாமா' என்று அழைக்கப்பட்டார்.

1939 ஆம் ஆண்டு காலி மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் தஹநாயக்கா அரசியலில் புகுந்தார்.

1944ஆம் ஆண்டு பிபிலைத்

(8 ஆம் பக்கம்பார்க்க)

## வடக்கு நோக்கி படையினர் பதிலடி

கொழும்பு, மே 5

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரின் மீதும் அங்குள்ள படைத்தளப் பகுதிகள் மீதும் மீண்டும் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் சரமாரியான ஆட்லறித் தாக்குதல்களை நடத்தினர்.

பதிலடியாக வவுனியா நகரத்துக்கு வடக்கே -- புலிகளின் நிலைகள் உள்ள-- பகுதிகள் எனக் கருதப்படும் பிரதேசங்கள் மீது படையினர் விடாது ஷெல் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் ஆட்லறித் தாக்குதல்களினால் வவுனியா நகரமே அதிர்ந்தது; வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் ஆடின என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

கொக்குவெளிப் பகுதியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாமடு, மடுகந்த மக்களுக்கு பங்கர் அமைக்க ஆலோசனை

வவுனியா, மே 5

நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் வவுனியா நகர் மீது ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மாமடு, மடுகந்த பகுதிகளில் உள்ள மக்களிடம் பாதுகாப்பு 'பங்கர்' களை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளதாக பி.பி.ஸி. சிங்கள சேவையின் பத்திரிகையாளர் ஜினசேன ரத்துகமகே தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளுக்கு நேற்றுக் காலை சென்றபடை அதிகாரி அப்பகுதியில் ஷெல் தாக்குதலால் ஏற்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### காணாமற்போன

## உளவு விமானம் ஓமந்தையில் வீழ்ந்தது?

கொழும்பு, மே 5

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இருந்து புறப்பட்ட பின்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் தானியங்கி வேவு விமானம் ஓமந்தையில் வீழ்ந்ததாக அறிக்கைகள் கிடைத்துள்ளன என்று விமானப்படை வட்டாரங்களை மேற்கொள் காட்டி 'சண்டே லீடர்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறை அருகே

## நடுக்கடலில்வைத்து 29 தமிழர் கைது!

ஊர்காவற்றுறைக்கு அருகே கடலில் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த 15 குடும்பங்களைச் சேர்ந்த— 29 தமிழர்கள்— நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் எனத் தெரியவந்தது.

வடக்கிலிருந்து தமிழகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தவர்களே நடுக்கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஆனால் தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்களே கைது செய்யப்பட்டதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நடன முருகன்
## வைத்திய நிலையம்

வன்னியில் இயங்கிய நடன முருகன் வைத்திய நிலையம்
மீண்டும் தன் சேவையை
**ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்தியில்**
**ஆரம்பித்துள்ளது.**

(46688)


# மரண அறிவித்தல்கள்

## நா. சி. நாகலிங்கம் தெல்லிப்பழை

(உரிமையாளர், சுன்னாகம், தெல்லிப்பழை, எரி பொருள் நிரப்பு நிலையம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்காலிகமாக ''ஆக்லேன்'' உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நா. சி. நாகலிங்கம் அவர்கள் 04-05-97 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஊரிக்காடு சின்னத்தம்பி, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்பு மகனும், தங்கமுத்தம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இரத்தினம்மா, செல்லையா, பராசத்தியம்மா சுப்பிரமணியம், கனகநாயகம், புஸ்பராணி மற்றும் Dr. சற்குணம், நல்லசிவம்பிள்ளை, டாஸ் ஆகியவர்களின் சகோதரரும், வசந்தா, Dr. சத்திவேல், பிறேமா, கருணைவேல், தர்மினி, பத்மினி, ரவீந்திரன், துஷ்யந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஹரிச்சந்திரா, சரவணமுத்து, சிவபாலன், நாகராஜன், சரஸ்வதி, பத்மயோகினி, கிரிஜா, கலா, Dr. C V. செல்லையா (அதிபர் – உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05-05-97 திங்கள் ''ஆக்லேன்'' உடுவிலில் உள்ள அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2-30 மணிக்கு சங்குவேலி தம்மளை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**

''ஆக் லேன்''
உடுவில்,
சுன்னாகம். (46681)

## கந்தசாமி ஜெயக்குமார்

**(கண்ணன் ஆசிரியர் — நயினாதிவு)**

நயினாதிவு, 3 ஆம் வட்டாரம் கந்தசாமி ஜெயக்குமார் (கண்ணன்) ஆசிரியர் ஜேர்மனியில் 1997-05-03 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர், பண்டிதர் நா. கந்தசாமி — மீனாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், மகிழ்தினியின் அன்புக் கணவரும், தனுஷன், மதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாமளா (ஆசிரியை, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை), நிர்மலா (மருந்தாளர், கொழும்பு சிறுவர் ஆஸ்பத்திரி), இந்திரா (யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனை), விஜயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் கனகரெத்தினம் (கண்ணையா, புங்குடுதீவு) தம்பதிகளின் அருமை மருகரும், நாகேஸ்வரன் (நில அளவையாளர்), இரத்தினசபாபதி (ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு), சிவானந்தராசா (ஓய்வுபெற்ற படவரைஞர்) மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் வசந்தராணி, கிறிஷ்ரி, கிருபா, தவநேசன், இலந்தினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க. நாகேஸ்வரன்**
(மைத்துனர்)

19/2, பீ. ஏ. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (46685)

## வே. க. கு. கோபாலபிள்ளை

நயினாதிவு பிரபல வர்த்தகரும், கிராம சபை 3ஆம் வட்டார முன்னாள் அங்கத்தவரும் அமுத சுரபி அன்னதான சபை ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவருமான வே. க. கு. கோபாலபிள்ளை 4-5-97 இல் இறைபிபதம் சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பையா-பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேசு, சதாசிவம், நல்லையாபிள்ளை, கனகரெத்தினம், திருமதி கனகாம்பிகை, திருமதி யோசம்மா ஓய்வு பெற்ற காணி மேற்பார்வை உத்தியோகத்தார் சிவசிதம்பரம், திருமதி புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற டாக்டர் சு. கதிரேசு, திருமதி வடிவாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கிருஷ்ணி, சந்திரகாந்தா, கொழும்பு மாநகர நீர்விநியோக முன்னாள் பொறியியலாளர் ஆர். ஆர் கணேசன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவில் 04-05-97ஆம் திகதி நடைபெற்றன.

தகவல்:
**ச. பொ. தில்லைநாதன்**
(மருமகன்)

நயினாதீவு. 3 (46689)

# அமைச்சரவை மாற்றம் குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்

அமைச்சரவை மாற்றம் குறித்து கொழும்பில் பல்வேறு வகையான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை மாற்றம் இன்று இடம்பெறும் என்று ஒரு பத்திரிகைச் செய்தியும்—

எதிர் வரும் 12ஆம் திகதி மாலைதீவில் ஆரம்பமாகும் சார்க் மாநாட்டிற்கு ஜனாதிபதி சென்று வந்த பின்னரே அமைச்சரவை மாற்றம் இடம் பெறும் என்று மற்றொரு பத்திரிகைச் செய்தியும் தெரிவித்தன.

''அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை''— என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்ததாக 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றம் குறித்து பத்திரிகைகளில் பல்வேறு ஊகங்கள் வெளிவருகின்றனவே என்று அவரிடம் 'சண்டே ஒப்சேவர்' செய்தியாளர் கேட்டபோது —

''அப்படி செய்தி வெளியிடுவது பத்திரிகைகளின் விருப்பம்''— என்று ஜனாதிபதி பதில் அளித்தாராம்.

(உ-3-150)


**NEW SCIENCE ACADEMY**
**NALLUR.**
பௌதிகவியல்
திரு. சம்மந்தன் B.Sc.

**97 A/L**
வினா - விடை வகுப்பு
07-05-97 Wed. 7 a.m.

**98 A/L**
வெப்பவியல்
07-05-97 Wed. 4.30

**99 A/L**
பொறியியல்
09-05-97 Fri. 4.30

(46687)



**NEW SCIENCE ACADEMY**
**NALLUR**
**கணக்கியல்**
திரு. பாலவாசன்
புதிய மாணவர்களின் வேண்டுகோளுக்குஇணங்க புதிய பிரிவு

**A/L 97**
**SLAS**
ஆரம்பம்: 06-05-97
செவ்வாய் 6-30 A. m.
குறிப்பு;
இதுதான் இறுதிப்பிரிவு

(46686)


# நீலனுடனும் சிவாவுடனும் தொடர்பு வைக்காதீர்கள்!

## ரணிலுக்கு இப்படி ஆலோசனை

கொழும்பு, மே 5

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் அக்கட்சியின் பிரமுகரும் எம். பியுமான நீலன் திருச்செல்வம் ஆகியோருடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று ஐ தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அக்கட்சியின் சில எம். பிக்கள் அழுத்தம் கொடுப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இருவரும் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர் என்றும் —

இவர்களுடன் தொடர்பு வைத்துச் செயற்படுவதைத் தவிர்க்குமாறும் —

அந்த எம். பிக்கள் ரணிலிடம் தெரிவித்துள்ளனராம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தொடர்பு கொள்ளவேண்டிய விவகாரங்களில் நம்பிக்கைக்கு உரியவராகக் கருதக்கூடிய ஜோசப் பரராஜசிங்கம் எம். பியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்த எம். பிக்கள் ரணிலிடம் ஆலோசனை கூறியுள்ளனராம். (உ-3-150)

# வாக்களிக்க அடையாள அட்டை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குக!

## வற்புறுத்துகின்றது ம. ஐ. மு.

எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல் வாக்களிப்புகளின் போது அடையாள அட்டை சமர்ப்பிப்பதை கட்டாயப் படுத்த வேண்டும் என்று கோரி மக்கள் ஐக்கிய முன்னணி போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து 10 லட்சம் பேரின் கையொப்பங்களைப் பெற்று ஜனாதிபதிக்கு மகஜர் அளிக்கும் போராட்டத்தை தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

இதற்கிடையில் —

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டையை சமர்ப்பிப்பதைக் கட்டாயப்படுத்தும் சட்ட மூலம் அடுத்த சில மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (உ-3-150)


யாழ். ஹற்றன் நஷனல் வங்கியினதும்
யாழ். லயன்ஸ் கழகத்தினதும்
ஆதரவுடன்

# யாழ். இந்துக் கல்லூரி

சதுரங்க கழகம் நடத்தும்
பாடசாலை அணிகளுக்கிடையிலான
வருடாந்த

# சதுரங்க (CHESS) சுற்றுப் போட்டி 1997

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட அணிக்கான விண்ணப்பத்தினை தங்களின் பாடசாலை அதிபருக்கூடாக எமது கழகத்திடம் நேரடியாக **09 - 05 - 1997** இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

குறிப்பு:-
1. **17 - 05 - 97** திங்கட்கிழமை போட்டி ஆரம்பமாகும்.
2. **18 - 05 - 97** ஞாயிறு மு. ப. 10. 00 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறும்.
3. மேலதிக விவரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

— அதிபர்

சதுரங்க கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (சி/666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வரை பதவி விலககோரி

# பீஹார் மாநிலத்தில் கலவரம்

## பொலீஸார் சூடு! 100 பேர் காயம்!!

புதுடில்லி, மே 5

பீஹார் மாநிலத்தில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தின்போது நிகழ்ந்த மோதல்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் பதவி விலக வேண்டும் எனக் கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில்இறங்கிய ஆயிரக்கணக்கானஎதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலீஸாருக்கும் மற்றும் முதல்வர் யாதவ்வின் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல்கள் மூண்டன,

ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

பாரதீய ஜனதாக்கட்சி ஆதரவாளர்களுக்கும் லாலு பிரசாத் யாதவ் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் நிகழ்ந்துள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தால் அந்த மாநிலமே ஸ்தம்பித்து போனதாகக் கூறப்படுகிறது. யாதவ் பதவி விலக வேண்டும் எனக் கோரியே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாக்கட்சியின் மாநிலத் தலைவரும் அக்கட்சியின் மற்றொரு தலைவரும் யாதவ்வின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

27 கோடி 10 லட்சம் டொலர்மாட்டுத் தீவன ஊழலுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள முதலமைச்சர் யாதவ் மீது விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்போவதாக சி. பி. ஐ. ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் முதல்வர் யாதவ் பதவி விலக மறுத்து வருகிறார்.

(ஐ-5)

# முதலமைச்சர் யாதவ் பதவி விலக மறுப்பு



யாதவ்

புதுடில்லி, மே ௫

எதிர்க்கட்சிகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து பதவியை விட்டு விலகப் போவதில்லை என்று பீஹார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

தனது அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் வெற்றியடையவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பல கோடி டொலர் பெறுமதியான மாட்டுத் தீவன ஊழல் விவகாரம் தொடர்பாக முதல்வர் யாதவ் மீதும் அவரது அரச அதிகாரிகள் பலர் மீதும் வழக்குத் தாக்கல் செய்ய தேசிய புலனாய்வுப் பணியகம் தயாராகி வருகின்ற வேளையிலும் பதவி விலகுவதில்லை என்ற முடிவை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

''குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்பு பதவியில் நீடிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது. எனவே இது குறித்து ஜனதாதள் கட்சி விரைவிலேயே முடிவு ஒன்றை எடுத்துவிட வேண்டும்'' என்று ஐக்கிய முன்னணித் தலைவர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஜனதாதள் கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான யாதவ் ஐச்கிய முன்னணி அரசில் பெரும் பங்கு வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

27 கோடி 10 லட்சம் டொலர்கள் பெறுமதியான இந்த நிதி மோசடி இந்தியாவில் இடம்பெற்ற பெரும் லஞ்ச விவகாரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. (ஐ)

# காங்கிரஸ் கட்சிக்குள் தலைமைப் போராட்டம்



## சீதாராம் கேசரிக்குச் சவால்

கொழும்பு, மே 5

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள் தலைமைப் பதவிக்கு போராட்டம் ஆரம்பித்துள்ளது. இந்தியாவின் பழமை வாய்ந்த இந்தக் கட்சியின் தேர்தல்கள் பின்போடப்பட்டுள்ளன.

இத்தேர்தல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரிக்கு ஒரு சவாலாக இருக்கப்போவதாகக் கூறப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சித்தலைவர் தேர்தல் இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது, ஆனால் அது பின்னர் ஜூலை மாதப் பிற்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சீதாராம் கேசரி ஜனவரி மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். ஆனால், இப்போது மகாராஷ்டிர மாநிலத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அந்துலே கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிட ஆயத்தமாகி வருகிறார்– என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய முன்னணிக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்குவது என்று தலைவர் சீதாராம் கேசரி தன்னிச்சையாக எடுத்த முடிவு கட்சிக்குள் ஒரு சாராருக்கு அவர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதன் மூலம் காங்கிரஸ் தனக்குத்தானே சேறு பூசிக் கொண்டது என அவர்கள் குற்றம் சுமத்திவந்தனர்.

இத்தகைய பின்னணியில் கேசரியின் தலைமைத்துவம் நீடிக்குமா என்ற ஐயத்தை அரசியல் வட்டாரங்கள் எழுப்புகின்றன. (ஐ-5)

# பஞ்சாப்புக்கு குஜ்ரால் விஜயம்

சண்டிகர், மே 5

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் நேற்று பஞ்சாப் மாநிலத்துக்கு விஜயம் செய்தார்.

அமிர்தசரஸில் பொற்கோயிலுக்குச் சென்ற அவர் அங்கு வழிபாடு செய்தார். ஜலந்தரில் முதியோர் இல்லத்துக்கான அடிக்கல்லை பிரதமர் நாட்டினார்.

பிரதமர் குஜ்ரால் முன்னர் நாடாளு மன்றத்தில் ஜலந்தரின் பிரதிநிதியாகப் பதவி வகித்துளளார். அதனால் அவருக்கு அங்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

(ஐ)

# சீனாவுக்கான உதவிகள் குறித்து அமெரிக்காவில் கருத்து வேறுபாடு

வாஷிங்டன், மே 5

சீனாவுக்கு அடுத்த ஆண்டும் உதவிகள் வழங்கப்பட வேண்டுமா என்பதில் அமெரிக்க நடாளுமன்றத்திற்கும் வெள்ளை மாளிகைக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உருவாகியுள்ளன

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே மீண்டும் நல்லுறவுகள் வளர்வதே இதற்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

ஹொங்கொங் நகர ஜனநாயக பாரம்பரியங்களுக்கு சீன நிர்வாகம் வருங்காலத்தில் மதிப்பு அளிக்காது நிராகரித்துவிடக் கூடும் என்ற அச்சம் அமெரிக்க நாடளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறான ஒரு நிலை உருவானால் சீனாவை வழிக்குக் கொண்டுவரும் ஒரு கடிவாளமாக மேற்படி தனிச் சலுகையை தங்கள் கைகளில் வைத்துக்கொள்ள அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்புகிறார்கள்.

தற்காலிகமாக இச் சலுகையை அளித்துக்கொண்டு அமெரிக்காவின் எதிர்பார்ப்புகளுக்கு சீனா ஒத்துவரவில்லையெனில் சலுகையை வாபஸ் பெறுவதாகக் கூறி சீனாவை வலைக்குள் வீழ்த்தலாம் என்ற உறுப்பினர்களின் கருத்தினை வெள்ளை மாளிகை ஒத்துக்கொள்ளவில்லை. (ஐ-10)

## பழனி பஸ் விபத்தில் 30 பேர் பலி!

சென்னை, மே 5

தமிழ் நாட்டில் பழனி அருகே நேற்று முன் தினம் 100 அடி பள்ளத்தில் பயணிகள் பஸ் ஒன்று உருண்டு விழுந்த சம்பவத்தில் 30 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.

புதுச்சேரியில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற அந்த பஸ் கொடைக்கானலில் இருந்து உதக மண்டலத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பஸ்சின் முன் சக்கரம் கழன்றதால் பஸ் கட்டுப்பாடு இழந்து பள்ளத்தில் விழுந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

### கெய்ரோவில் மணற்புயல்

கெய்ரோ, மே 5

எகிப்தில் கடந்த வெள்ளியன்று வீசிய கடும் மணல் காற்றுக் காரணமாக கெய்ரோ விமான நிலையத்தில் விமானங்கள் இறங்க அனுமதிக்கப்படவில்லை.

பாலைவனத்திலிருந்து மணலை அள்ளிக்கொண்டு சுழன்று அடித்த அந்தக் கடும் காற்றினால் 12 பேர் பலியாகியுள்ளனர். 50 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

(ஐ-10)

### அரபாத் வேண்டுகோள்

காஸா, மே 5

மோசமாகி வரும் மேற்காசிய சமாதான முயற்சிகளைக் காப்பாற்றுமாறு அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனுக்கும், உலகத் தலைவர்களுக்கும் யஸீர் அரபாத் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

பலஸ்தீனியர்களின் தாயக உரிமைக்குஎதிரானஇஸ்ரேலிய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஐ)

### அகதிகளை வெளியேற்றுவது துரிதம்

கிழக்கு ஸயரில் கிசங்கானி நகருக்கு அருகே உள்ள முகாம்களில் இருந்து ஹூட்டு இன அகதிகளை வெளியேற்றும் பணியை ஐ. நா. அதிகாரிகள் துரிதப்படுத்தியுள்ளனர்.

முபுட்டு, கபீலா பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் அங்கு நிலைமை மோசமடையும் என்று அஞ்சப்படுகிறது. (ஐ)

## ஸயர் கிளர்ச்சிப் படைகள்

# தலைநகர் நோக்கி முன்னேற்றம்

கின்ஸாசா, மே 5

ஸயர் நாட்டு அதிபர் முபுட்டுவுக்கும், கிளர்ச்சியாளர் கூட்டணித் தலைவர் லோறன் கபீலாவுக்கும் இடையிலான முதற் சந்திப்பு தென்னாபிரிக்கப் போர்க் கப்பலில் ஆரம்பமாக இருந்த வேளை —

தலைநகர் கின்ஸாசாவை நோக்கி பல முனைகளில் இருந்து கிளர்ச்சியாளர்கள் முன்னேறத் தொடங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

பேச்சுக்களின் போது அதிபர் முபுட்டு மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவே கிளர்ச்சிப் படைகள் தலைநகர் நோக்கி நகர்த்தப்படுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

கடந்த எட்டு மாதங்களாகத் தொடரும் உள்நாட்டுப் போருக்கு முடிவுகாணும் நோக்குடன் அதிபர் முபுட்டுவுக்கும், கபீலாவுக்கும் இடையே சந்திப்பை ஏற்படுத்துவதில் தென்னாபிரிக்க மத்தியஸ்தர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

32 ஆண்டுகள் பதவி வகித்துவரும் அதிபர் முபுட்டு பதவியில் இருந்து விலகி அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்று கபீலா வலியுறுத்தி வருகிறார். (ஐ)

## பணயக் கைதிகள் விவகாரம்:

# ஒரு கோடி 50 லட்சம் டொலர் பெரு நாட்டு அரசுக்கு இழப்பு!

லீமா, மே 5

126 நாள்கள் நீடித்த ஜப்பானியத் தூதரக பணயக் கைதிகள் நாடகத்தினால் பெரு நாட்டு அரசுக்கு ஒரு கோடி 50 லட்சம் டொலர்கள் இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 17 ஆம் திகதி பணய நாடகம் ஆரம்பமானது முதல் ஏப்ரல் 22 ஆம் திகதி அதிரடி நடவடிக்கை மூலம் அது முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாள் வரை பல்வேறு தேவைகளுக்காக இப்பணம் செலவிடப்பட்டுள்ளது.

24 மணிநேர பாதுகாப்பு சேவைக்காக லீமாவில் பொலீஸ் இராணுவ கூட்டு நிலையம் அமைக்கப்பட்டமை, ஆகாயப் பிராந்தியத்தில் வேவு விமானம் ஓயாமல் பறந்து கொண்டிருந்தமை, தூதரகத்தினுள் நுழைய 200 மீற்றர் நீளமான சுரங்கப்பாதை அமைக்கப்பட்டமை உட்பட பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கே இப்பணம் செலவிடப்பட்டது.

இரகசியமாகப் பயிற்சியளிக்கப்பட்ட கொமாண்டோ படையினருக்கான செலவே இவற்றில் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈரானிய அரசு மறுப்பு

தெஹிரான், மே 5

ஈரானிலிருந்து தற்காலிகமாக அழைக்கப்பட்டிருந்த ஜேர்மன் மற்றும் டென்மார்க் நாடுகளின் தூதர்கள் தெஹிரானுக்கு மீண்டும் வந்து பொறுப்பேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என ஈரான் தெரிவித்துள்ளது.

ஜேர்மனியில் நடைபெற்ற கொலைச் சம்பவம் ஒன்றுக்கு ஈரான் அரசு பின்னணியில் இருந்தது என அந்த வழக்கை விசாரித்த நீதி மன்றம் தெரிவித்ததை அடுத்து ஐரோப்பிய நாடுகள் ஈரானில் இருந்து தமது தூதுவர்களை கடந்த மாதம் திரும்ப அழைத்தன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஈரானுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே முறுகல் நிறை நிலவிவருகிறது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்
கனடா கிளையின்
அனுசரணையுடன் நடத்தும்
விசேட வகுப்புக்களுக்கு

**ஆசிரியர் தேவை**

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சித்திரம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு கல்வித் தகைமையும், அனுபவமும், பயிற்சியும் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கற்பிக்கப்பட வேண்டிய வகுப்புகள்:
ஆண்டு **09, 10, 11**

சம்பளம்: ரூபா **4000/-** இல் இருந்து
விண்ணப்ப முடிவுத் திகதி: **1997 - 05 - 15**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்,
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு.

★ வெளியூர் ஆசிரியர்களுக்கு இருப்பிட வசதி செய்து தரப்படும்.

தலைவர்,
(46639) நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு.



**அறிவித்தல்**

பல்லாண்டு காலமாக மக்களின் நல் ஆதரவையும்,
அபிமானத்தையும் பெற்றுக்கொண்ட
எமது தயாரிப்பான

"க. மு. மண்டான் ஸ்ரீமார்க்"
சுருட்டுக்கள்

சிறிது கால இடைவெளிக்குப் பிறகு புத்தாண்டுடன் வெளிவருகின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் எமது சுருட்டு விற்பனையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

எமது பெயரில் தரம்குறைவான போலிச் சுருட்டுக்கள் உலாவுகின்றபடியால் சுருட்டு வாங்கும் போது காரம், மணம், குணம் நிறைந்த தரமான
"க. மு. மண்டான் ஸ்ரீமார்க்" சுருட்டுக்களை
கேட்டுவாங்கி உபயோகியுங்கள்.

**புதிய விலைப்பட்டியல்**
★ 1 பண்டல் சுருட்டு 450/- ★ 100 சுருட்டு 180/-
★ 1 கட்டு சுருட்டு 19/- ★ 1 சுருட்டு 2/-

ரட்ணம் வெற்றிலைக் கடை (கனகரத்தினம்)
மார்க்கெட், பருத்தித்துறை.

மண்டான் சுருட்டு நிர்வாகம்
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
[46658]


## மெய்வல்லுநர் போட்டி

திருநெல்வேலி, மே 5

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் வெள்ளிக்கிழமை அதிபர் செ. கேசவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் என். விவேகானந்தராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மானிப்பாய், இலங்கை வங்கி உதவி முகாமையாளர் சிறிநிவாசன் கலந்து கொள்வார்.

(ஐ-135)

## எழுதுமட்டுவாள் சந்தை இயங்குகிறது

எழுதுமட்டுவாள் சந்தை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. பாதுகாப்பு மண் அணைக்கு அப்பால் வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டதையடுத்து இப்பகுதியில் உள்ள வியாபாரிகளும் வர்த்தகர்களும் சந்தையில் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் சந்தையில் தினமும் மக்கள் கூடுகின்றனர்.

(ஐ-117)

## மோட்டார் சைக்கிள் லைசென்ஸ்

சாவகச்சேரி நகரப்பகுதியில் செல்லும் மோட்டார் சைக்கிள்கள் நேற்று முன்தினம் பொலீஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

சாரதி லைசென்ஸ், வரிப் புத்தகம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவை பரிசோதிக்கப்படுவதாகவும், இவற்றை வைத்திருக்காத மோட்டார் சைக்கிளோட்டிகள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# மீளக்குடியமர்வுப் படிவங்களை வழங்குமாறு அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு, மே 5

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இடப்பெயர்வின் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள நிரந்தர குடியிருப்பாளர்கள் தமது மீளக்குடியமர்வுக்கான படிவத்தினை இதுவரை நிரப்பிக் கொடுக்காது விடின் உடனடியாக அப்படிவத்தை நிரப்பிக் கொடுக்குமாறு வலி. தெற்கு பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதத்தின் பின்னர் இப்பிரதேசத்தினுள் மீளக்குடியமர்ந்த பலர் தமது குடியமர்வினை உறுதிப்படுத்தும் படிவத்தினை பூர்த்தி செய்து வழங்காமல் உள்ளனர்.

அவ்வாறுவழங்காதிருப்பவர்கள் தத்தம் கிராம சேவை உத்தியோகத்தர்களை சந்தித்து படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி கையளிக்குமாறு திரு. மகாலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ-152)


அச்சு இயந்திரம்
(PRINTING MACHINE)

அச்சு இயந்திரம் PLATEN MACHINE உடன் தேவை. கிறவுண் காப் - CROWN HALF அல்லது அதற்கும் சிறிய அளவு 1/8 FOLIO விரும்பத்தக்கது.

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (46678)



கல்வித்திணைக்களம வலயம் I
யாழ்ப்பாணம்

**ஏலவிற்பனை**

எமது திணைக்களத்தில் சுமார் **3500** பெரிய வெற்று உரப்பைகளும், சுமார் **75** (கிரேட்ஸ்) மரப் பெட்டிகளும் **14—05—1997** ஆம் திகதி புதன்கிழமை காலை **10.30** மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

**13—05—1997** ஆம் திகதி காலை **10.00** மணி தொடக்கம் இத்திணைக்களத்தில் பொருள்களைப் பார்வையிடலாம். ஏலம் நடைபெறும் அன்றைய தினமே கொள்வனவு செய்பவர் முழுப்பணத்தையும் செலுத்தி பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

கல்விப்பணிப்பாளர்
வலயம் - 1, யாழ்ப்பாணம்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (சி/645)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 12 — 1935

உதிர்வு: 17 — 04 — 1996

### அமரர் க. இராசரெத்தினம் (நயினை)

(இளைப்பாறிய சுங்க அதிகாரி)

**திதி: 06 - 05 - 1997**

என் அன்புத் தெய்வமே!
அணையாத ஒளிவிளக் கென்று
இரு மெழுகுவர்த்தியாக இருந்தோம்!
என் ஆருயிர் நாயகரே!
ஒரே பூங்கொத்தில் கட்டப்பட்ட
இரண்டு அழகிய மலர்களைப் போலே
நாம் இணைந்து இசைக்க இரு கருவிகளாயிருந்தோம்

என் இதயம் நிறைந்தவரே
இடைநடுவில் காலம்நம்மைப்பிரித்துவிட்டதோ?
யான் என்செய்வேன் என் அன்புத் தெய்வமே—
என்றும் உங்கள் ஆன்மா இறையடி சேர
நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் ஆண்டு திதி நாளை 06 — 05 — 1997 அவரது இல்லத்தில் நடைபெறும். அதில் யாவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேர்த்தி, சகோதரர்கள், மைத்துனர்,
உற்றார், உறவினர்.

63/3 கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். (46676)


பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்
25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்

**A/L 99**
விலங்கியல்
குழியவியல், பாகுபாடு
ஆரம்பம்: **07-05-97**
புதன் 3 மணி
திரு. யதுனந்தனன்

**A/L 97**
இரசாயனவியல்
துரிதமீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: **07-05-97**
புதன் 4 மணி
திரு. ரூபன்

**A/L 97**
கணக்கியல்
கூலி - Labour
ஆரம்பம்: **06-05-97**
3 மணி
திரு. சுதர்சன்
(46680)



தாதி தேவை

ஆனைக்கோட்டையிலிருக்கும் வைத்தியசாலைக்கு I. V ஏற்றக் கூடிய அனுபவமுள்ள தாதி தேவை.

**Dr. சிவனடியான்**
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(46675)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16 — 02 — 1943

உதிர்வு: 05 — 05 — 1996

### அமரர் அப்புக்குட்டி ஏகாம்பரம்

அப்பாவைக்காணவென ஆசையுடன் ஓடி வந்த அன்பு மகள் துஸ்யந்தி பாதி வழி நின்றிருக்க அப்பாவை எதிர் நோக்கி அருமை மகன் துஸ்யந்தன் அம்மாவுடன் கனடாவில் காத்திருக்க அமெரிக்க மண்ணிலே நீர் தனிமையாக அமைதி வாழ்வை நோக்கி இறைவன் அடி சென்று ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயர்.

வாழ்வில் அன்பு செய்தவர்கள்
மரணத்திலும் நினைவு கூருவார்களாக!

இவரது ஆன்ம சாந்திக்காக சற்பிரசாத நாதர் ஆலயத்தில் 05-05-97 காலை 6 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இ. ஜெயரட்ணம் (ஜெயம்)
குடும்பத்தினர்.

70/5, கடற்கரை வீதி,
நாவாந்துறை.

Mrs. G. Ehamparam,
10 San Romano Way - 3110,
Downs View, Ontario,
M 3 N 2 Y 2,
Canada.

(46677)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்ப செஞ்சிலுவைக் குழுவின் உதவி

## தமிழக அரசு நாடுகிறது

மதுரை, மே 5

தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள ஈழத் தமிழ் அகதிகளின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கு செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவின் உதவியை தமிழக அரசு நாடியுள்ளது.

தமிழக அரசின் சட்டத்துறை அமைச்சர் ஆலடி அருணா இத்தகவலை மதுரையில் தெரிவித்தார்.

95 ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதன் பின்னர் வந்த காலப் பகுதியிலும் இலங்கையில் இருந்து தமிழகத்துக்குச் சென்ற ஆயிரக்கணக்கான அகதிகள் அங்கு முகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்களில் பலர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும்—

இலங்கையில் இவர்களது பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியை அரசு நாடியிருப்பதாகவும் அமைச்சர் ஆலடி அருணா தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி கிடைத்தவுடன் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்த திட்டம் வகுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் காணாமற் போனோர் குறித்து இணைப்பதிகாரியுடன் பேச்சு

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் அண்மையில் வடமராட்சி தென்மராட்சிப் பகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் செனவிரட்னாவைச் சந்தித்து குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக அவருடன் பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்பின் போது 1997 ஆம் ஆண்டில் காணாமற் போனோர் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக சங்கப்பிரதிநிதிகள் அவரிடம் எடுத்துக் கூறினர்.

இவர்களது கைதுகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தாம் நடவடிக்கை எடுப்பதாக — இராணுவ இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆட்கள் கைதாவது காணாமற்போவது தொடர்பான சம்பவங்கள் குறித்து உடனுக்குடன் தன்னிடம் தெரியப்படுத்துமாறும்—

இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை சங்கப்பிரதிநிதிகள் தன்னைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்—

என்று கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மறவன்புலோ பகுதியில் கால் நடைகளுக்கு நோய் பரவும் ஆபத்து

சாவகச்சேரி, மே 5

மறவன்புலோ பகுதியில் கால்நடைகளுக்கு நோய் தொற்றும் அறிகுறிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரியின் உதவியை நாடியுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பொது இடமொன்றில் கால் நடைகளை வருவித்து தடுப்பூசி ஏற்ற ஒழுங்குகள் செய்து தரும்படி கால்நடை வளர்ப்போர் கேட்டுள்ளனர். (ஐ-31)

## வலி. தென்மேற்குப் பிரிவில் விவசாயிகள் சம்மேளனம்

திருநெல்வேலி, மே 5

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் விவசாயிகள் சம்மேளனங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இப் பிரிவிலுள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் 9 விவசாயிகள் சம்மேளனங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் —

இதுவரை 3 விவசாயிகள் சம்மேளனங்கள் பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதனினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

விவசாயிகளுக்கான சகல உள்ளீடுகளும் இந்த அமைப்பின் மூலமே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-135)

## பயிற்சி நெறி ஆரம்பம்

திருநெல்வேலி, மே 5

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் முறை சாராக் கல்வித் திட்டத்தின் கீழ் சிகை அலங்காரம், சமையற் கலை ஆகிய இரு பயிற்சி நெறிகள் இன்று திங்கட்கிழமையன்று பிற்பகல் 2 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பமாகவுள்ளது. 42 யுவதிகள் இப் பயிற்சி நெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ளார்கள். (ஐ-135)

## ஆஸ்பத்திரி கிணற்று நீர் பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 5

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள கிணறு ஒன்றில் அண்மையில் எரிபொருள் கலந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்தக் கிணற்று நீர் இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளது.

கடந்த ஒருவாரகாலமாக இந்நிலை இருப்பதை அடுத்து ஆஸ்பத்திரி நிர்வாகம் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையுடன் தொடர்பு கொண்டது.

நீர் வழங்கல் வடிகால் சபையினர் அக்கிணற்று நீரைப் பரிசோதனைக்காக எடுத்துச்சென்றுள்ளனர். (ஐ-15)

## தொழு நோய் பரிசோதனை

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் பளை, முகமாலைப் பகுதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொழுநோய் பரிசோதனை நடத்தவுள்ளனர்.

சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் இச்சோதனை நடத்தப்படும். (ஐ-117)

## ஈஸ்வராம்பாள் தினம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மத்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள இல்லத்தில் அன்னை ஈஸ்வராம்பாள் தினம் கொண்டாடப்படும். சிறுவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் அங்கு இடம் பெறவுள்ளன. (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 5

குடாநாட்டில் கைதானோர் மற்றும் காணாமற் போனோர் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க யாழ் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது. (ஐ)

## வீதிகள் துப்புரவு

திருநெல்வேலி, மே 5

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தினர் பண்டத்தரிப்பு – பெரியவிளான் பிரதான வீதியிலும் ஏனைய வீதிகளிலும் பற்றைகளை வெட்டி அகற்றி வருகின்றனர். (ஐ-135)

## நெடுந்தீவுக்கு காலையிலும் மின்சாரம் வழங்க நடவடிக்கை

நெடுந்தீவு, மே 5

நெடுந்தீவுப் பகுதிக்கு விரைவில் காலைவேளையிலும் மின் வசதி கிடைக்க உள்ளது.

மாணவர்கள் கல்வி கற்க வசதியாக அதிகாலை 5மணி முதல் 6 மணிவரை ஒரு மணிநேர மின் விநியோகம் இப்பகுதிக்கு வழங்கப்பட உள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவுப் பகுதி பொறுப்பாளர் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்.

நெடுந்தீவுக்கு தற்போது மாலை 6மணி முதல் 10மணி வரை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (ஐ-111)

## விசர் நாய்க்கடி தடுப்பு மருந்து தென்மராட்சியில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 5

தென்மராட்சிப் பகுதியில் விசர் நாயினால் கடியுண்ட பலர் அதற்கான தடுப்பூசி மருந்தைப் போட முடியாமல் உள்ளனர்.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் இம் மருந்து (ஏ. ஆர். வி.) முடிவடைந்த தினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையிலும் இந்த ஊசி மருந்து குறைந்த அளவிலேயே கையிருப்பில் உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-15)

## சாவகச்சேரி பகுதியில் நால்வர் விசர் நாயால் கடியுண்டனர்

சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினமும் நால்வர் விசர்நாயினால் கடியுண்டனர்.

இவர்களில் கதிர்காமநாதன் அகிலங்கன் (வயது4), சரவணமுத்து சோமசுந்தரம் (வயது 54), ஆகிய இருவரும் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு இதற்கான தடுப்பு ஊசிமருந்தைப் போடுவதற்காக (ஏ.ஆர்.வி) வந்திருந்தனர். மற்றைய இருவரினதும்பெயர் விவரம் தெரியவரவில்லை.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஏ.ஆர்.வி ஊசிமருந்து கடந்த சில வாரங்களுக்கு முன் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## சித்த ஆயுள்வேதக் கல்லூரி மாணவருக்கு விசேட பரீட்சை

திருநெல்வேலி, மே 5

யாழ்.நகரிலுள்ள லங்காசித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி வன்னிப் பிரதேசத்திலிருந்து திரும்பியுள்ள மாணவர்களுக்கு தற்போது விசேட பரீட்சைகளை நடத்தி வருகின்றது.

இதேவேளை இக் கல்லூரியில் கடந்த 58 வருட காலமாக அதிபராகவும், விரிவுரையாளராகவும் பல்வேறு பதவிகளை வகித்த டாக்டர் ஏ. வி. இராசரத்தினத்திற்கு கல்லூரி மாணவர் மன்றம் பாராட்டுவிழாவை அண்மையில் நடத்தியது,

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் டாக்டர் என். வாமதேவன் தெரிவித்தார். (ஐ-135)

## கைதான இளைஞரின் கடிதம்

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள தி. முரளீதரன் என்பவரிடம் இருந்து கடிதம் ஒன்று தமக்குக் கிடைத்திருப்பதாகவும்—

அவரது உறவினர்கள் யாழ். பணிமனைக்கு வந்து அக்கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நீதியும் சமாதானமும் மிக்க வாழ்வை உருவாக்கத் திடம் கொள்வோம்

### ஈ. பி. டி. பி. மேதின விழாவில் உரை

நெடுந்தீவு, மே 5

பல்வேறு துயரங்களைச் சுமந்து நிற்கும் நாம் எதிர்காலத்திலும் இவை தொடராதவகையில் ஒன்றுபட்டு நிற்பதன் மூலம் எமது உரிமைகளை வென்றெடுப்போம். நீதியும் சமாதானமும் மிக்க புதிய வாழ்வொன்றைத் தோற்றுவிக்க இந்த மேதினத்தின்போது திடசங்கற்பம் கொள்வோம்.

ஈ.பி.டி.பி கட்சியின் தீவகப் பொறுப்பாளர் என். மனோகரன் ஊர்காவற்றுறை கரம்பன் சண்முகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ்.லீனஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழினத்தின் சுபீட்சம் நிறைந்த எதிர்காலத்திற்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் பாட்டாளி மக்களுக்கு உரிய உரிமைகள் கிடைக்கவும் எமது கட்சிச் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாம் செயற்படுவோம்; இதன் மூலம் நீதியான அரசியல் தீர்வு கிடைக்க வழிசெய்வோம் — என்றார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. செல்வநாயகம் ஆசிரியர் தேவாப்பிரியன் உடபட பலர் அங்கு உரையாற்றினர். தீவகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து மக்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதியின் மூன்று அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்து சிறந்த சேவையாளர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விழாவில் வைத்து ''தேவா விருது'' வழங்கப்பட்டது. (ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் கோயில் பின் வீதியில், 1½ பரப்பு காணியும் சகல வசதிகளுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. சுத்தமான தண்ணீர் சுற்றாடலில் அமைந்துள்ளது. 29-11-89 இல் குடிபுகுந்தது. தொடர்பு: திருமதி ஜெயகுமாரன், எச்சாட்டி வைரவர் கோயில் பின் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். [47211]

முட்டையிடும் 40 சேவர் இன சிவப்பு, கறுப்பு கோழிகளும், 25 அடி நீள 13 அடி அகலமான கொட்டில் கப்புகள், பனைமரங்கள், பாலையன்னல், நிலை, கதவு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு; A. ரட்ணராஜா, 21, கண்டி றோட், நாவற்குழி. [46648]

C. 50 Lancer Model மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அண்மையில் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாகனம், தொடர்பு: முகாமையாளர், தேநீர்ச் சாலை, பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி. [47210]

### தவறிவிட்டது

ஆறுமுகம் மகாதேவன் என்பவரின் அடையாள அட்டை, உரும்பிராய்ச்சந்தி அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராயில் இயங்கும் வசாவிளான் மகாவித்தியாலய அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [47209]

29-4-97 கப்பலில் பிரயாணிகளாக வந்த எமது பயணப் பொதிகளில் ஒன்று காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இதில் வீட்டுத்திறப்பு முக்கியமான மருத்துவச் சான்றிதழ்கள், போன்றனவும் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் C முத்துக்குமாரதாஸ், 117/5 அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [46670]

### வீடுதேவை

யாழ். பல்கலைக்கழக சூழலில். பல்கலைக்கழக பெண் விரிவுரையாளருக்கு சிறிய அளவிலான வீடு தேவை. வசதியான தனி அறையும் கவனத்திற் கொள்ளப்படும். க. முத்துக்குமாரசாமி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [46679]

மாணவர்களே!
எதிர்பாருங்கள்
**10-05-1997 சனி**
காலை 9-00 மணி
**குகன்**
**கல்வி நிறுவனம்**
ஆவரங்கால்
(46669)

## வீடு தேவை

வசதியான வீடு அருள் ஆச்சிரமம், ஆயர்இல்லம், பெரிய கோயில், பிறஸ்றோட் அண்மித்த பகுதிகளில் விற்பனைக்கு இருப்பின் விலை விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

**இல. 612**
**C/O 'உதயன்'**
**யாழ்ப்பாணம்.**
(46646)

### நாடகம் எழுதுவது எப்படி

வீரகேசரியில் யாழ்ப்பாணத்தில் ஆறு மாதங்கள் கட்டுரையை எழுதும் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில், ரூபா 25, நாடகம் எழுதுவது எப்படி? நூல் ரூபா 50, எங்கும் கிடைக்கும். [46516]

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும்தீர, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் தடை நீங்க ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். குருக்கள், பொய்யாமொழி சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். [46553]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 04 — 1948

மறைவு: 16 — 04 — 1996

**பொன்னையா பாலகிருஸ்ணேஸ்வரன்**
(லங்கா சிமெந்து லிமிட்டெட்)
**திதி: 05 — 05 — 1997**

இணைந்திருந்தோம் மூவருமே
இடம்பெயர்ந்தோம் மூவருமே
இன்னல் அடைந்தோம் மூவருமே
இணைபிரிந்தோம் இயற்கையினால்

''தங்கள் கனவுகள் எங்கள் நினைவுகளில்''

மரணத்திலும் நேசிக்கும் இதயங்கள்:
**மனைவி, மகன், பெற்றோர், சகோதரர், மாமி, மச்சான், மச்சாள், பெறாமக்கள், மருமக்கள்.**

முகவரி:-
புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.
(46645)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி செல்லப்பா வள்ளிமுத்து**

தோற்றம்: **13-04-1917**

மறைவு: **05-04-1997**

விடிகின்ற வேளையிலே
விடியாத மனந்தந்து
விண்ணகத்தின் மீதினிலே
விரைந்தேறிக் கொண்டாயோ!

விலையில்லா உன் உறவு
விதியினால் சென்றாலும்
சிதைவில்லா உன் மனது
சிந்தையிலே நின்றிடுமே!

பிரிவால் துயருறும்:
**செ. பேரம்பலம் குடும்பம்,**
**செ. திருச்செல்வம் குடும்பம்,**
**வே. அருணந்தி குடும்பம்,**
**உற்றார், உறவினர்.**

பெரிய அரசடி,
சாவகச்சேரி.
(46672)

## 1997 ஆம் கல்வியாண்டு

மேற்படி நிறுவனத்தின் 1997 ஆம் ஆண்டு விரிவுரைகள் **02—05—1997** தொடக்கம் நடைபெற்றுவருகின்றன.

| | | |
|---|---|---|
| **HNDA** | — பகல் / மாலை | **I, II, III, IV** ஆம் ஆண்டு |
| **HNDC** | — பகல் | **II, III, IV** ஆம் ஆண்டு |
| **NDBS** | — பகல் | **I, II** ஆம் ஆண்டு |
| **NDBF** | — பகல் | **II** ஆம் ஆண்டு |
| **NDE** | — பகல் | **II** ஆம் ஆண்டு |

மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை பதிவு செய்து விரிவுரைகளுக்கு சமுகமளிக்கவும்.

**ஒருங்கிணைப்பாளர்,**
**உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவனம்.**
(சி/664)

## முதலாம் வருட நினைவஞ்சலி



பிறப்பு: 08 — 04 — 1935

இறப்பு: 05 — 05 — 1996

**திருமதி பிலோமினா பிரான்சிஸ்**
(உடுவில்)

ஈராறு மாதங்கள் போனதுவோ
அம்மா நீயின்றி,
நாளெல்லாம் பொழுதெல்லாம்
கலங்குகிறோம் உன் நினைவால்,
மீட்பராம் யேசுவின்
மகிமையில் பங்கேற்று
அமைதியில் வாழ்ந்திட
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்:

இவரின் நல்வாழ்விற்கு நன்றியாகவும், இவரின் ஆன்ம சாந்திக்காகவும், இரங்கற் திருப்பலி மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் 05-05-1997 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**

மல்வம்,
உடுவில்,
சுன்னாகம்.
(47207)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வீ.இரா.சு.மகாதேவன் (வாசு)**

அன்னையின் மடியில்: **23 — 04 — 1952**

ஆண்டவன் அடியில்: **07 — 05 — 1986**

இந்த நாளுடன் நீசென்று வருடம் பதினொன்றானாலும்
எங்களுளம் உன் நினைவால் நிறைந்தே என்றும்
பந்தமுடன் நினைத்திருக்கும் பரமன் தாளில்
பரிவுடன் நீயிருக்க வேண்டுகின்றோம்.

உன்நினைவால் உருகும்:
**வீ.இரா.சுந்தரமூர்த்தி குடும்பத்தினர்.**

210, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(46645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் விரைவில் படை நடவடிக்கை!

கொழும்பு, மே. 5

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு படையினர் தயாராகின்றனர். விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தல், அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களை தரை வழியாக இணைத்தல் ஆகிய இரு நோக்கங்களைக் கொண்டே இந்த படை நடவடிக்கை அமையவிருக்கிறது.

'சண்டேலீடர்' ஆங்கில வார ஏட்டின் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் தமது கண்ணோட்டத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மன்னார்—வவுனியா பாதையில் அல்லது வவுனியா—நொச்சி மோட்டைப்பாதையில் நடக்கலாம். ஆனால் அந்தப் பாதை எது என்பது இப்போது திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது.

மடுவீதிச் சந்தியில் உள்ள படையினர் காடுகள் ஊடாக மடுவுக்கு சென்று அங்கிருந்து கிளிநொச்சிக்குச் செல்லலாம். அது சுலபமானதாக இருக்கலாம். ஆனால் பெரும் உயிரிழப்பை அது கொண்டு வரும்.

வவுனியாவில் இருந்து படையினர் இலகுவாக ஓமந்தை வரை முன்னேறலாம். இலகுவானதாகவும், கடினமற்றதாகவும் இந்த நகர்வு அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் அதற்குப் பின் முன்னேறுவது படையினருக்கு மிகக் கடினமானதாக அமையும். இருமருங்கிலும் புலிகளின் நிலைகள் அமைந்துள்ளதால் முன்னேறும் முயற்சியின் போது கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

ஒரே நேரத்தில் மன்னார் ஊடாகவும், கிளிநொச்சியில் இருந்தும் தாக்குதலை ஆரம்பித்தால் அது புலிகளைப் பலவீனப்படுத்துவதாக அமையக் கூடும்.

வவுனியா — கிளிநொச்சி நீண்ட நெடுஞ்சாலையைக் கைப்பற்றி படையினரால் தக்க வைத்துக் கொள்ள முடியுமானால் 14 வருட யுத்தம் முடியும் சாத்தியம் உருவாகும்—இவ்வாறு அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-3-150)

## கிளிநொச்சியில் 2,000 புலிகள்

கொழும்பு, மே 5

வவுனியா — கிளிநொச்சி தரைப்பாதையைத் திறக்கும் நோக்குடன் எந்த நேரமும் தாக்குதல்களை படையினர் ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்த்து, கிளிநொச்சிப் பகுதியில் சுமார் இரண்டாயிரம் விடுதலைப் புலிகள் திரண்டிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் இச்செய்தியை வெளியிட்டன.

அதேநேரம் —

மூதூரில் புலிகள் திரண்டு வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## புலிகளுடன் பேச்சு நடத்துமாறு தெரிவுக்குழு முன் கோரிக்கை

### நாளை சமர்ப்பிக்கப்படலாம்

கொழும்பு, மே 5

நாடாளுமன்றத் தெரிவுக் குழு நாளை கூடும் போது—

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அங்கு சில உறுப்பினர்களால் முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக பல்வேறு தகவல்கள் கொழும்பில் வெளியாகியுள்ளன.

அது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்ட போது—

''இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உபகுழு தீர்மானம் எடுத்தால் அதை ஐ. தே. க. எதிர்க்காது''—என்று அவர் பதிலளித்தார்.

இதற்கிடையில் —

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை விடுதலைப் புலிகளின் பார்வைக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக தெரிவுக் குழுவின் உப-குழு ஆராய்ந்து வருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-150)

### நாளை தொடக்கம்

## தெரிவுக்குழுக் கூட்டம் மூன்று நாள்களுக்கு!

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் மற்றும் அரசமைப்புத் திருத்தம் ஆகியவை குறித்து ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாளை முதல் மூன்று நாள்கள் கூடவிருக்கிறது.

தற்போதைய அமர்வுகளின் போது காணிப் பகிர்வு, வடக்கு — கிழக்கு இணைப்பு போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

இந்த விடயங்களில் ஒருமுகமான கருத்தை தெரிவிக்கும் நோக்கில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தங்களுக்கிடையில் பேச்சுக்களை நடத்தி வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தகவல் வெளியிட்டார்.

(உ-3-150)

### இலங்கை விவகாரம் தொடர்பான

## புதிய பிரிட்டன் அரசின் போக்கு அடுத்த மாதத்திலேயே தெரியவரும்

கொழும்பு, மே. 5

புதிதாக பதவியேற்றுள்ள பிரிட்டன் அரசின் இலங்கை தொடர்பான ஈடுபாடு, போக்கு, கொள்கை ஆகியவை பற்றிய விடயங்கள் அடுத்த மாதத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கலாம் என்று கொழும்புப் பத்திரிகைகள் ஹேஸ்யம் தெரிவித்துள்ளன.

புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தொழிற் கட்சி இலங்கைத் தமிழருக்கு ஆதரவான போக்கைக் கடைப் பிடிக்கக் கூடும் என்று பேச்சடிபடும் நிலையிலும் —

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஒரே போக்கைக் கடைப்பிடிப்பது தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதில் வெற்றிகண்ட பிரிட்டனின் கன்சர்வேட்டிவ் அரசு பதவி இழந்துள்ள சூழ்நிலையிலும் —

இலங்கை விவகாரம் தொடர்பாக முன்னைய பிரிட்டன் அரசின் போக்கை புதிய அரசு கடைப்பிடிக்குமா என்று பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையிலுமே —

இந்த ஹேஸ்யத்தை கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்றது.

அதன் பின்னரே இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் பிரிட்டனின் நிலைப்பாடு தொடர்பான விடயங்கள் வெளியாகும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகைகள் மேலும் குறிப்பிட்டன.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தேவாரமும் சிவன் கோயிலும்

கடந்த ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் குறித்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை பல அதிர்ச்சித் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளது.

அரசாங்கத் தலைவர்கள் மேடைகளில் பேசும் போது தெரிவிக்கும் தகவல்களை பொய்யாக்கும் விதத்தில் புள்ளிவிவரங்கள் அமைந்துள்ளன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 1995 ஆம் ஆண்டில் 5.6 சத வீதமாக இருந்து சென்ற வருடத்தில் 3.08 சத வீதமாக வீழ்ச்சி கண்டிருக்கிறது. இதனை ஏழு வருட காலத்தில் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சி என்று வர்ணிக்கிறது மத்திய வங்கி அறிக்கை.

இதே போன்று வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை, நுகர்வோர் சுட்டெண், ஏற்றுமதி வளர்ச்சி, சுற்றுலாத் துறை, முதலீட்டுத்துறை என்று எல்லாமே பெருமளவில் பாதக நிலையை அடைந்திருக்கின்றன.

போர் நடைபெற்றாலும் பொருளாதாரம் வளர்ந்து வருவதாகவும், பல துறைகளும் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் ஏனைய அரசுத் தலைவர்களும் கூறி வந்தனர். அவர்களும் சில புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டித்தான் பேசுவதுண்டு.

ஆனால் மத்திய வங்கியின் அறிக்கையும் அதில் காணப்படும் தரவுகளும், புள்ளி விவரங்களும் அரசுத் தலைவர்களின் கூற்றுக்களுக்குச் சவால் விடுவனவாக உள்ளன.

கடந்த சில வருடங்களாகவே மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் உள்நாட்டுப் போரினால் நாட்டின் பொருளாதாரம் மிகமிகமோசமாகப் பாதிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை.

அத்தோடு வடக்கு-கிழக்குப் போரை நிறுத்த வேண்டும் என்றும் அந்த ஆண்டறிக்கைகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அந்தப் புத்திமதி செவிடன் காதில் ஊதிய சங்காகவே பயனற்றுப் போவதே அன்றி, பொருட்படுத்தப் படுவதில்லை.

இம்முறை போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

போருக்காக வருடாந்தம் 3,800 கோடி ரூபாசெலவிடப்படுகிறது. இது நாட்டின் பொருளாதாரத்தை செல்லரிப்பது போல அரித்து அழிக்கிறது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி முதல் அரச நாடாளுமன்ற உறுப்பினர் ஈறாகபேசுவது உண்மையே.

ஆனால் அதற்கு முற்றிலும் மாறாகவே, முரணாகவே செயற்பாடுகள் அமைகின்றன; போர் தீவிரப்படுத்தப்படுகிறது; விமானங்கள் கப்பல்கள் புதிதுபுதிதாகக் கொள்வனவு செய்யப்படுகின்றன; படைகளுக்கு அதிக துருப்புக்கள் திரட்டப்படுகின்றன.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில் என்பது போல, சொல்வது ஒன்று செய்வது நேர்மாறு என்று காலம் கழிந்து கொண்டிருக்கிறது.

மத்திய வங்கி அறிக்கைகள் ஓங்கி ஒலித்தாலும் போர் இப்போதைக்கு ஓயாது. நாட்டின் பொருளாதாரமும் உயராது. இதுவே இலங்கைக்கு வியாதியாகி விட்டது. இப்போதைக்கு இது தீராதா?

## தனங்கிளப்பில் மோதல்

தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் நேற்று அதிகாலை 2. 30 மணிக்கு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக ஊர்ஜிதப்படுத்தப் படாத செய்திகள் தெரிவித்தன.

சுமார் அரைமணி நேரம் மோதல் இடம்பெற்றது: துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் தொடர்ந்து கேட்டன.

இச்சம்பவத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததாகவும் —

அதிகாலை 4 மணியளவில் அப்பகுதியில் உள்ள படைமுகாம் ஒன்றில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் இரண்டு தடவை இறங்கிச் சென்றதாகவும் —

நேற்றுக் காலை அப்பகுதியில் சுற்றிவளைப்பு இடம்பெற்றதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

## நான்கு புலிகள் மரணம்

வெற்றிலைக்கேணியில் அண்மையில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் நான்கு விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகப் 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

லெப்டினன்ட் மன்னன், இரண்டாவது லெப்டினன்ட் கருங்கதிர், மேஜர் சிங்கன், கப்டன் செழியன் ஆகியோரே உயிரிழந்ததாக அறிவிக்கப் பட்டது.

இந்த மோதல் பற்றிய மேல் விவரங்கள் தெரியவரவில்லை. (உ-21)

## தம்பையா காலமானார்

முன்னாள் நீதியரசரும் பிரபல சட்ட அறிஞரும் சமூக சேவகருமான எச். டபிள்யூ. தம்பையா (91 வயது) நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

கல்விமானும், சமய சிந்தனையாளருமான இவர் ராணி சட்டத்தரணி கௌரவம் பெற்றவருமாவார்.

(உ-3-156)

## கைது

சுமார் நாற்பது கொள்ளைகளில் ஈடுபட்ட — பாதாள உலகத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் —தினேஷ் என்ற — பிரபல கொள்ளைக்காரர் ஒருவர் தெஹிவளை அல்போன்ஸோ பிளேசில் வைத்துபொலீஸாரால் கைது செய்ப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் இதுவரை கொள்ளையிட்ட பொருள்களின் பெறுமதி 30 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-10)

## சமய சந்நிதிகளில்

எழுதுமட்டுவாள் மருதங்குளம் மகா கணபதி பிள்ளையார் ஆலய மகா கும்பாஷேக தின மணவாளக் கோல சங்காபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 'சிவாகம கிரியா தத்துவநிதி' சிவஸ்ரீ ச. சோமசுந்தரக் குருக்களால் நடத்தப்படும். (ஐ-117)

## நாளை.

**சித்திரை 25**

செவ்வாய்க்கிழமை

திதி: அமாவாசை பின் இரவு 2-38 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி முற்பகல் 10.29 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 10. 26 –11.56

ராகுகாலம் : 2.56-4.26

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# புலிகளைப் பேச்சுக்கு உடனே அழைக்குக!

## வற்புறுத்துகின்றது 'மேர்ஜ்'

கொழும்பு, மே 5

''அரசு — ஐ.தே.க. உடன்பாட்டின் பின்னர் எதுவும் நடக்கவில்லை. இந்த உடன்பாட்டின் பலனாக உடன் விடுதலைப்புலிகளுக்கு பேச்சுக்கு அழைப்பு விடுக்கவேண்டும்.''

'மேர்ஜ்' அமைப்பின் தலைவர் சாள்ஸ் அபயசேகரா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

இனப்பிரச்சினை விவகாரத்தை ஒரே குரலில் கையாள்வது என்று ஜனாதிபதிக்கும் ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கவேண்டும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும்போது, இறுதியில் விடுதலைப் புலிகளுடன் இணக்கம் காணப்படத்தான் வேண்டும்.

ஏதோ ஒரு கட்டத்தில் விடுதலைப்புலிகளுடன்பேசித்தான் ஆக வேண்டும். ஆகவே விரைவாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இருதரப்பும் இணங்குவதாக அரசாங்கமும் ஐ.தே.கவும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டால் மட்டும் போதாது. அந்த இணக்கத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

அந்தப் பேச்சுக்களில் ஐ. தே. க. பிரதிநிதிகளையும் சேர்க்க வேண்டும்—என்றார்.

வத்தேகம சமிந்த தேரர், கொழும்பு மாநகர சபை ஐ. தே. கட்சி உறுப்பினர் சி. மகேந்திரன் ஆகியோரும் இதேகருத்தை வெளியிட்டுள்ளனர். (உ-3-150)

# திலகர் வன்னி சென்று திரும்பியதை புலிகள் தரப்பு ஊர்ஜிதம் செய்தது

## கரிகாலனும் அவருடன் மேற்கு நாடொன்றில்!

கொழும்பு, மே. 5

விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பாளர் லோறன்ஸ் திலகர் வன்னி சென்று திரும்பியதையும்—

விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கரிகாலன் தற்போது மேற்கு நாடு ஒன்றில் தங்கியுள்ளார் என்பதையும்—

விடுதலைப் புலிகளின் அதிகாரம் வாய்ந்த பேச்சாளர் ஒருவர் இறுதியாக கடந்த வாரம் ஒப்புக் கொண்டுள்ளார் என்று ''சண்டே ரைம்ஸ்'' அரசியல் செய்தியாளர் தாரகி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அக்கறை காட்டி வந்த மேற்கு நாடு ஒன்றின் கோரிக்கையின் படியே லோறன்ஸ் திலகர் வன்னி சென்றுள்ளார். அங்கு உயர் மட்டத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் அவர் திரும்பினார். அவருடன் கரிகாலனும் சென்றார். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் மேற்கு நாட்டுக்கு செல்லவில்லை. அவர் இன்னமும் வன்னியில்தான் உள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை கொண்ட அந்த மேற்கு நாட்டிலேயே லோறன்ஸ் திலகரும், கரிகாலனும் தங்கியுள்ளனர்.

அந்த நாடு இன்னமும் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறையாகவே உள்ளது.

அந்த நாட்டு அரசாங்கத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாமல் இருப்பதற்காகவே இந்த விவகாரம் குறித்து விடுதலைப் புலிகள் மௌனம் சாதிக்கின்றார்கள்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-21-150)

# ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம்: ஏற்புடமை குறித்து நீதிமன்றத் தீர்ப்பு

## சபாநாயகர் நாளை வெளியிடுவார்

கொழும்பு, மே 5

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இலங்கை ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைச் சபாநாயகர் நாளை நாடாளுமன்றத்தில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து 15 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பைச் சபாநாயகருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நாளை கூடும்போது சபாநாயகர் இத்தீர்ப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமா என்பது குறித்தும் —

அல்லது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறவேண்டுமா என்பது குறித்தும் —

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் விவரித்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

# ஒலிபரப்பு சட்ட மூலம்: வாபஸ்பெற வற்புறுத்து

இலங்கை அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இலங்கை ஒலிபரப்பு அதிகார சபை சட்ட மூலத்தை வாபஸ் பெறுமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

— ஐ. நா. மனித உரிமைகள் குழுவிடம் ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஒலிபரப்பு அதிகாரசபை சட்ட மூலம் மக்களின் அடிப்படை உரிமையை மறுக்கிறது என்றும் —

அரசியல் சட்டத்தில் உத்தரவாதமளிக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுக்கும் முயற்சி இது என்றும் —

அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (உ-3-21)

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். ரயில் நிலையத்துக்கு இன்று காலை 7 மணிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெற்கே செல்ல யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 561 ஐச் சேர்ந்தோருக்கு நேற்று அனுமதி கிடைத்துள்ளது என்றும் —

அப்பட்டியலில் உள்ளவர்கள் பயணத்துக்கான தமது பதிவுகளை தற்போது மேற்கொள்ளலாம் என்றும்—

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

### தஹநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்)

தொகுதியில் வெற்றி பெற்று சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டார்; 1947 ஆம் ஆண்டு காலித் தொகுதியில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்றார்.

1959 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எச். டபிள்யூ. பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்ட பின்னர் சுமார் பத்து மாத காலம் நாட்டின் பிரதமராக அவர் பதவி வகித்தார். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-05-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈழத் தமிழருக்காக தமிழகம் உரியவேளையில் கொதித்து எழும்

## கொழும்பில் ஜனார்த்தனன் பேட்டி

கொழும்பு, மே 5

''தமிழகத்தில் இலங்கைத் தமிழர் மீதான அக்கறை அற்றுப்போனதாக எவரும் எண்ணத் தேவையில்லை.''

— இவ்வாறு கொழும்பு வந்துள்ள உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனன் தெரிவித்தார்.

இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு வந்த அவர் கொழும்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

''இலங்கைத் தமிழர் தொடர்பாக 83 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருந்த உணர்ச்சியும், எழுச்சியும் சில காலமாகத் தணிந்து காணப்பட்டது.

''தற்போது நிலைமை மாறி வருகிறது. தமிழர் மீதான அபிமானம் தற்சமயம் தமிழகத்தில் உருவாகி வருகிறது.

''உரிய சந்தர்ப்பம் ஏற்படும் தறுவாயில் இலங்கைத் தமிழருக்காகத் தமிழ்நாடு மீண்டும் கொதித்தெழத் தயாராக இருக்கிறது.'' — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-3)

### யாழ். பாடசாலைகளுக்கென

# 30 கொம்பியூட்டர்கள் விரைவில் வந்து சேரும்

யாழ். மாவட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் யாழ், மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு என கொள்வனவு செய்யப்பட்டுள்ள முப்பது கொம்பியூட்டர்களும், அவற்றை இயக்குவதற்காக வாங்கப்பட்டுள்ள முப்பது ஜெனரேட்டர்களும் அடுத்த வாரத்துக்கு முன்னதாக வடக்கே வந்து சேரும் என சம்மந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரபல்ய பாடசாலைகளுக்கு இந்த கொம்பியூட்டர்கள் வழங்கப்படவிருப்பது தெரிந்ததே.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்கவென 300 முதலுதவிப் பெட்டிகளும் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன. (உ.3)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ள இராணுவ முன்னரங்க நிலைகள் மீதே முதலில் ஆட்லறிகள் வீழ்ந்தன, தொடர்ந்து மடுகந்தை, மாமடு, ஈரப்பெரிய குளம், வவுனியா நகரில் உள்ள இராணுவ முகாம் தொகுதி ஆகியவை உள்ள பிரதேசங்களில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட ஷெல்கள் வந்து வீழ்ந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

புலிகளின் ஆட்லறித் தாக்குதல்களினால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. மாமடுப்பகுதியில் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், மடுகந்தையில் உள்ள குடாகச்சிக்கொடிய பாடசாலைக்கு அருகில் வீழ்ந்த ஷெல்லினால் பாடசாலை அதிபரும் காயமடைந்தனர். பாடசாலை அதிபரின் கை துண்டிக்கப்பட்டதாக செய்தி ஒன்று தெரிவித்தது.

அப்பகுதியில் உள்ள சில வீடுகளும், அந்தப் பாடசாலையும் சேதம் அடைந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் உள்ள இராணுவ மற்றும் விமானப் படைத் தளப் பிரதேசங்களிலும் சில ஆட்லறிகள் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனால் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை.

படையினர் தரப்பில் நடத்திய பதில் தாக்குதல்களினால் விடுதலைப்புலிகளுக்கு சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

வவுனியா நகர்மீது நேற்று அதிகாலை ஆட்லறித் தாக்குதல் இடம்பெற்ற போதும்— ஞாயிற்றுக் கிழமையான நேற்று—வவுனியா நகரம் பரபரப்பு, பதற்றம் ஏதுமின்றிக் காணப்பட்டது.

வடக்கே உள்ள புலிகளின் வலுவான நிலைகள் மீது அரசு இன்னொரு தாக்குதல் நடத்துவது நிச்சயம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரின் தென்பகுதியில் படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் —

எந்த நேரமும் படை நடவடிக்கையை ஆரம்பிக்கக் கூடியதான தயார் நிலையில் படையினர் இருப்பதாகவும் —

வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ-3-21)

# விவசாய பீடம் ஒட்டுசுட்டானில்!

யாழ்ப்பாணம், மே 5

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துக்கு அருகில் இயங்கவிருக்கிறது.

தற்சமயம் கறுப்பட்டி முறிப்பில் இயங்கும் விவசாய பீடத்தை ஒட்டுசுட்டானில் இயங்குவதற்காக அங்கு விசேட கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொட்டகைகளை அமைக்கும் பணி இம்மாத இறுதிக்குள் பூர்த்தியடையும் என்றும் —

அதன் பின்னர் மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### மாமடு...

(முதலாம் பக்கத் தொடர்)

சேதம் குறித்து மக்களுடன் கலந்துரையாடியதாகவும் —

பங்கர்களை அமைக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறியதாகவும்— அவர் தெரிவித்தார்.

பங்கர்களை எவ்வாறு — எவ்வகையில் — அமைக்க வேண்டும் என விளக்கம் அளிக்கப்பட்ட போதும் நேற்று பங்கர்கள் அமைக்கும் பணியை மக்கள் ஆரம்பிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

### உளவு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்ற தகவலை விமானப் படை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இஸ்ரேலிடம் இருந்து பத்து லட்சம் அமெரிக்க டொலருக்கு (சுமார் ஐந்து கோடி ரூபாவுக்கு) இந்த வேவு விமானம் வாங்கப்பட்டது என்றும்—

இவ்வாறு வாங்கிய மூன்று விமானங்களில் இரு விமானங்களை விமானப்படை இழந்து விட்டது என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org